**தலைப்பு 183 – மக்கள் தொடர்பு மற்றும் மக்கள் அலுவல்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

மக்கள் தொடர்பு மற்றும் மக்கள் அலுவல்கள் அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 நவம்பர் 18 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும், இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு உரியவகையிலான உள்ளகக்கட்டுப்பாடுகளைத்

தயாரித்தல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**1.3 கணக்காய்வு அவதானிப்புகள்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், மக்கள் தொடர்பு மற்றும் மக்கள் அலுவல்கள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, இதன் (அ) முதல் (உ) வரை காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 முதல் 1.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் தவிர திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

**(அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை**

அமைச்சால் 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்குகள்**

**(i) மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 229,505,850 தொகையானதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு இதில் ரூபா 226,297,277 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தேறிய ஏற்பாட்டில் ரூபா 3,208,573 அதாவது 1.4 சதவீத ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

**2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**

| செலவினம் | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டெழுபவை | 63,264,700 | 62,406,797 | 857,903 | 1.36 |
| மூலதனம் | 166,241,150 | 163,890,480 | 2,350,670 | 1.41 |
| கூட்டுத்தொகை | 229,505,850 | 226,297,277 | 3,208,573 | 1.40 |

**(ii) பாதீட்டு முரண்கள்**

04 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததன் காரணமாக ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னரான சேமிப்பு அச் செலவின விடயங்களுக்கு உரித்தான தேறிய ஏற்பாட்டில் 15 சதவீதத்திலிருந்து 49 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்கு உரித்தான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் பின்வருமாறாகும்.

| விடய இல | செலவுகள் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 18301 | 3,000,000 | 2,610,473 | 300,000 | 1,386,872 | 7,000,000 | 3,773,414 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

18301 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத் தினத்தில் அறவீடுகள் நிலுவையாக் காணப்பட்ட மீதி ரூபா 590,500 ஆகக் காணப்பட்டன.

**(ஈ) கட்டுநிதிக் கணக்குகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப் பிரமாணம் 371 இற்கு முரணாக நிறைவேற்றுத்தரம் அற்ற 15 உத்தியோகத்தர்களுக்கு 29 சந்தர்ப்பங்களின் போது ரூபா 177,800 தொகையான குறித்த பணிக்கான துணைக் கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

(ii) நிதிப் பிரமாணம் 371 இன் பிரகாரம் பணி நிறைவேற்றப்பட்டதை உடனடுத்து பெற்றுக்கொள்ளப்பட்ட குறித்த பணிக்கான துணைக்கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 5 உத்தியோகத்தர்களால் 9 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட துணைக்கட்டுநிதி 2 மாதங்கள் முதல் 6 மாதங்கள் வரையான காலத் தாமதத்தை அடுத்து தீர்க்கப்பட்டிருந்தது.

**(உ) பொது வைப்புக் கணக்குகள்**

---

அமைச்சின் 6000/0000/00/0015/0195/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 836,653 தொகையான மீதி காணப்பட்டது.

## 1.4 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்கியிராத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | |
| (i) நிதிப் பிரமாணம் 880 | - | அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணைக் கட்டளைச்சட்ட அதிகாரச்சட்டத்தின் 612 ஆம் அதிகாரத்தின் படி பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களின் பிணை வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 1646 | 261,630 | அமைச்சிற்கு உரித்தான 02 குழாம் வாகனங்களிற்கு உரித்தான நாளாந்த ஓட்ட அட்டவணைகளும் மாதாந்த பொழிப்பு அறிக்கையும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை** | | |
| 1992 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 26/92 ஆம் | - | அமைச்சிடம் உள்ள குழாம் வாகனங்களில் அரச இலட்சினை |

| | | |
|---|---|---|
| இலக்கச் சுற்றறிக்கை மற்றும் 1994 ஆகஸ்ட் 03 ஆம் திகதிய 26/92(i) ஆம் இலக்கச் சுற்றறிக்கை | | பொறிக்கப்பட்டிருக்கவில்லை. |

**(இ) அமைச்சரவைப் பத்திரம்**

| | | |
|---|---|---|
| 2004 மே 12 ஆம் திகதிய 04/0427/020/002 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் | 465,520 | மின் மற்றும் அச்சு ஊடகப் பணிகள் அரச ஊடக நிறுவகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அமைச்சால் தனியார் நிறுவகத்தின் மூலம் அப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |

## 1.5 செயலாற்றல்

2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி அமைச்சின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

**போதிய அளவில் மேற்கொள்ளப்படாத முக்கிய செயற்பாடுகள்**

அமைச்சால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளுக்கிடையே பின்வரும் முக்கிய செயற்பாடுகள் போதியளவில் மேற்கொள்ளப்பட்டிராத பல்வேறு சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(அ) அமைச்சின் தலைமைக் காரியாலயமாக செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த பொது மக்களின் பயன்பாட்டிற்காக அரசாங்க சேவைகள் தொடர்பான தகவல் வலையமைப்பைக் கட்டியெழுப்புதல் மற்றும் செயற்படுத்தப்படுதல், நல்லாளுகை தொடர்பான அரசாங்க நிறுவகத்தைத் தெளிவூட்டுதல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதற்கு மீளாய்வாண்டின் போது எவ்வித நிகழ்ச்சித்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மக்கள் நலனுக்கு மக்கள் ஒருங்கிணைப்பிற்காக 04 சமூக நலன் நடமாடும் சேவைகள் நடாத்தப்படுவதற்காக ரூபா 3.4 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. இச் சேவையின் போது முன்வைக்கப்பட்ட 15,265 பிரச்சனைகளில் 11,696 பிரச்சனைகளுக்கான தீர்வுகள் வழங்கப்பட்டிருந்தன. தீர்வுகள் வழங்கப்பட்டிராத பிரச்சனைகளின் எண்ணிக்கை 3,567 ஆனதுடன் அச் சேவையில் வழங்கப்பட்டிருந்த மொத்த பிரச்சனைகளின் எண்ணிக்கையில் 23.38 சதவீதமாகக் காணப்பட்டன. இதற்கு மேலதிகமாக அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்த 101 பிரச்சனைகளில் 15 பிரச்சனைகளுக்கு மாத்திரமே தீர்வுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் தீர்வுகள் வழங்கப்பட்டிராத எண்ணிக்கையில் 85 சதவீதமாகக் காணப்பட்டன.

(இ) அமைச்சால் மாவட்டச் செயலகத்தினூடாக பல்வேறு செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதற்காக ரூபா 43,142,082 தொகையான ஏற்பாடு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், அவ் ஏற்பாட்டைப் பயன்படுத்தப்படுவது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 1.6 முகாமைத்துவ நலிவுகள்

அமைய பதவியணிக்கான சம்பளக் கொடுப்பனவின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) அமைய பதவியணிக்கான சம்பளக் கொடுப்பனவின் போது வருகைப் பதிவேட்டிற்குப் பதிலாக வருகை மாதாந்தப் பொழிப்பை அடிப்படையாகக் கொண்டு 12 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 3,195,991 தொகையான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. 03 உத்தியோகத்தர்களால் சம்பளம் பெற்றுக்கொள்ளப்பட்டமைக்கான கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே குறித்த உத்தியோகத்தருக்காக வேறு உத்தியோகத்தரால் சம்பளம் பெற்றுக்கொள்ளப்படுகையில் சமர்ப்பிக்கப்பட்ட "பொது 38" படிவம் பூர்த்திசெய்யப்படாது சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அமையப் பதவியணியில் 12 உத்தியோகத்தர்களுக்காக வருகைப் பதிவேடு பேணப்பட்டிராததுடன் 2013 ஏப்ரல் 14 ஆம் திகதி தவிர ஆண்டின் எல்லா நாட்களிற்காகவும் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. குறித்த உத்தியோகத்தருக்குப் பதிலாக வேறு உத்தியோகத்தரால் சம்பளம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

## 1.7 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணி தொடர்பான நிலை பின்வருமாறாகக் காணப்பட்டது.

| | பதவியணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 06 | 04 | 02 |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 02 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 36 | 23 | 13 |
| (iv) | ஆரம்ப நிலை | 12 | 09 | 03 |
| (v). | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 08 | 06 | 02 |
| | **கூட்டுத்தொகை** | **64** | **44** | **20** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 20 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.